

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2023) சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம் பிடித்த மாவீரன்

# அழகு முத்துக்கோன் புகழ் மங்காது ஒளிவீசிடும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 13–

விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த மாவீரன் அழகுமுத்துக்கோனின் வாழ்வும் போராட்டமும் என்றும் புகழ் மங்காது ஒளிவீசிடும் என்று அவரது பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி பதிவிட்டுள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**தமிழ்நிலத்தின் தலைவணங்கா வீரத்துக்கும் தலைசான்ற தியாகத்துக்கும் தன்னிகரற்ற அடையாளமாக விளங்கும் மாவீரர் அழகு முத்துக்கோனின் பிறந்தநாள்.**



**ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியாவின் பல பகுதிகளும் கிளர்ந்தெழுவதற்கு முன்பே அதைச் செய்து, விடுதலைப் போராட்ட வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த அழகு முத்துக்கோனின் வாழ்வும் போராட்டமும் என்றும் புகழ்மங்காது ஒளிவீசிடும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.7.2023) தலைமைச் செயலகத்தில், இந்திய கூடைப்பந்து சம்மேளனத்தின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட ஆதவ் அர்ஜுன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### மணிமாறன் தென்றல் - நிகழ்ச்சி எற்பாடு! தளபதி முருகேசன் தலைமை! கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வரவேற்புரை!

# கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைக்கிறார்! வாகை சந்திரசேகர் - செந்தலை ந.கவுதமன் சிறப்புரை!

பொள்ளாச்சி, ஜூலை 13-

கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழாகருத்தரங்கம் நாளை (14.7.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்குபொள்ளாச்சிலாரி உரிமையாளர்கள்திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர்தளபதிமுருகேசன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர்கே.வி. கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

நகர செயலாளர் இரா. நவநீத கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ச.புவனேஷ், சல்மான்கான் நாசர், கே.சபரிகிருஷ்ணன், வி.ஆர்.நிஷாந்த், இருகூர் உதயபூபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கருத்தரங்கை கோவை மாவட்டபொறுப்புஅமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைக்கிறார்.

'கலை உலகம் கலைஞர்' என்ற தலைப்பில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவரும் நடிகருமானவாகைசந்திரசேகரும், 'கோவை தந்த கலைஞர்'என்றதலைப்பில் புலவர் செந்தலை ந.கவுதமன் ஆகியோர் கருத்துரை வழங்குகின்றனர்.

இதில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழுஉறுப்பினர்மு.கண்ணப்பன்,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கே.இ.பிரகாஷ், கு.சண்முகசுந்தரம் எம்.பி., கழக சட்ட திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், மருத்துவர் கி.வரதராஜ், டாக்டர் ஆர். மகேந்திரன், இரா.தமிழ் மணி, திப்பம்பட்டி ஆறுச்சாமி, ஜி.ஏ.அதிபதி, பொள்ளாச்சி சித்திக், கே.எம். நாகராஜ், பனப்பட்டி தினகரன், வி.பி.சந்திரசேகர், எம். அமுதபாரதி, மு.க.முத்து, கோழிக்கடை ந.கணேசன், ஏர்போர்ட் ராஜேந்திரன், கே.வி.சுப்பிரமணியம், பா.க.சாமிநாதன், சி.பொன்னுச்சாமி, செ.கனிமொழி, எஸ்.ஜெயப்பிரகாஷ், சியாமளா நவநீத கிருஷ்ணன், எஸ்.கௌதமன், கோ.பாலகிருஷ்ணன், எஸ்.ஜெயக்குமார், எஸ். ஆர்.அண்ணாதுரை, ஏ.ஆர். வி.சாந்தலிங்க குமார், ஜெ.மஞ்சு சௌமியா, மாணிக்கவேல், சாதிக்அலி, மா.சண்முகம், மருதராஜ், என்.கண்ணுசாமி, வி.பி.கிரி, பி.ஏ.செந்தில்குமார், சிட்டி டி.வி.உசேன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட இளைஞர் அணிதுணைஅமைப்பாளர் மணிமாறன்தென்றல்செய்துள்ளார். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.திருமலை ராஜா நன்றி கூறுகிறார்.


